**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 9 |
| நாள் | : | 19.12.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீரஞ்சீவி | ஜாதி | : | |
| தந்தை – பெயர் | : | தேவராஜலு | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u> **:**

நான் ஜங்காலப்பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் கிராமத்தை சேர்ந்தவர். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அந்த பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அது **அ.த.சா.ஆ.2** ஆகும். மற்றப்படி எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 31.01.2024ம் விநாயகர் கோவில் கும்பாபிசேகத்தில் ரோசையா மகன் கஜேந்திரனுக்கும், குருசாமி மகன் சண்முகம் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அதில் 05.02.2024 மாலை 6.00 மணி அளவில் இந்த பிரச்சனை காரணமாக அவர்களை அடித்துவிட்டதாகவும், மேலும் 27.02.2024ம் தேதி காலை 8.00 மணிக்கு சண்முகம் ஜங்காலப்பள்ளி பஸ் ஸ்டேன்டில் மயக்கம் அடைந்துவிட்டதாகவும், அதன் பிறகு சென்னை பொது மருத்துவமனைக்கு சேர்த்ததாகவும், சண்முகத்தின் அப்பா 02.03.2024 மாலை 4.30 மணிக்கு

பொதட்டூர் பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அது சம்மந்தமாக போலிசார் சண்முகத்தை தாக்கிய இடத்தை பார்வை செய்ததாகவும், அதில் அவர்கள் தயாரித்த பார்வை மகஜரில் நானும், கண்ணப்பன் என்பவரும் அந்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 10 |
| நாள் | : | 19.12.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணப்பன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | தேவராஜலு | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> :

நான் ஜங்காலப்பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் கிராமத்தை சேர்ந்தவர். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அந்த பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அது **அ.த.சா.ஆ.3** ஆகும். மற்றப்படி எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 31.01.2024ம் விநாயகர் கோவில் கும்பாபிசேகத்தில் ரோசையா மகன் கஜேந்திரனுக்கும், குருசாமி மகன் சண்முகம் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அதில் 05.02.2024 மாலை 6.00 மணி அளவில் இந்த பிரச்சனை காரணமாக அவர்களை அடித்துவிட்டதாகவும், மேலும் 27.02.2024ம் தேதி காலை 8.00 மணிக்கு சண்முகம் ஜங்காலப்பள்ளி பஸ் ஸ்டேன்டில் மயக்கம் அடைந்துவிட்டதாகவும், அதன் பிறகு சென்னை பொது மருத்துவமனைக்கு சேர்த்ததாகவும், சண்முகத்தின் அப்பா 02.03.2024 மாலை 4.30 மணிக்கு

பொதட்டூர் பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அது சம்மந்தமாக போலிசார் சண்முகத்தை தாக்கிய இடத்தை பார்வை செய்ததாகவும், அதில் அவர்கள் தயாரித்த பார்வை மகஜரில் நானும், சிரஞ்சீவி என்பவரும் அந்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 11 |
| நாள் | : | 19.12.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிரன்குமார் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | ரூத்ரய்யா | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u> **:**

நான் ஜங்காலப்பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் கிராமத்தை சேர்ந்தவர் தான். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் இரண்டு கையொப்பம் வாங்கினார்கள். அதில் ஒன்று ஒப்புதல் வாக்குமூலம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மற்றொன்று கைப்பற்றுதல் மகஜர் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.4** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆகும். மற்றப்படி எதுவும் தெரியாது. என்னுடன் புரகரய்யாவும் கையெழுத்து செய்தார்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 03.03.2024ம் நானும், எங்கள் கிராமத்தை சேர்ந்த புரகரய்யா என்பவரும் நெடுங்கல் பேருந்து நிலையத்தில் இருந்த போது போலிசார் எங்களை அழைத்தார்கள் என்றும், அப்போது கடந்த 05.02.2024ம் தேதி எங்கள் கிராமத்தை சேர்ந்த சண்முகம் என்பவரை குருசாமியின் மகன்

சண்முகம் என்பவர் கட்டையால் தாக்கியதாகவும், அது சம்மந்தமாக அவரை போலிசார் கைது செய்ததாகவும், அவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்க சொன்னார்கள் என்றும், அப்போது அவர் சண்முகத்தை உருட்டு கட்டையால் தாக்கியதாகவும், மேலும் அவருடைய அண்ணனை மிரட்டியதாகவும், அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றும், மேலும் அவரை தாக்குவதற்கு பயன்படுத்திய உருட்டு கட்டையை ஜங்காலப்பள்ளி பேருந்து நிறுத்ததில் மறைத்து வைத்திருப்பதாக சொல்லி எங்களை அழைத்து சென்றதாகவும், அப்போது எதிரி அந்த இடத்திலிருந்து அடையாம் காட்டி போலிசாரிடம் எடுத்து கொடுத்தார் என்றும், அதில் போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என்னுடன் இருந்த புரகரய்யா என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், இது சம்மந்தமாக போலிசார் 03.03.2024ம் என்னை விசாரணை செய்தார் என்றும், போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 12 |
| நாள் | : | 19.12.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | புரகரய்யா | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | புருஷோத்தமன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் ஜங்காலப்பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் கிராமத்தை சேர்ந்தவர் தான். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் இரண்டு கையொப்பம் வாங்கினார்கள். அதில் ஒன்று ஒப்புதல் வாக்குமூலமும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மற்றொன்று கைப்பற்றுதல் மகஜர் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.6** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.7** ஆகும். மற்றப்படி எதுவும் தெரியாது. என்னுடன் கிரன்குமார் என்பவரும் கையெழுத்து செய்தார்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 03.03.2024ம் நானும், எங்கள் கிராமத்தை சேர்ந்த கிரன்குமார் என்பவரும் நெடுங்கல் பேருந்து நிலையத்தில் இருந்த போது போலிசார் எங்களை அழைத்தார்கள் என்றும், அப்போது கடந்த 05.02.2024ம் தேதி எங்கள் கிராமத்தை சேர்ந்த சண்முகம் என்பவரை குருசாமியின் மகன்

சண்முகம் என்பவர் கட்டையால் தாக்கியதாகவும், அது சம்மந்தமாக அவரை போலிசார் கைது செய்ததாகவும், அவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்க சொன்னார்கள் என்றும், அப்போது அவர் சண்முகத்தை உருட்டு கட்டையால் தாக்கியதாகவும், மேலும் அவருடைய அண்ணனை மிரட்டியதாகவும், அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றும், மேலும் அவரை தாக்குவதற்கு பயன்படுத்திய உருட்டு கட்டையை ஜங்காலப்பள்ளி பேருந்து நிறுத்ததில் மறைத்து வைத்திருப்பதாக சொல்லி எங்களை அழைத்து சென்றதாகவும், அப்போது எதிரி அந்த இடத்திலிருந்து அடையாம் காட்டி போலிசாரிடம் எடுத்து கொடுத்தார் என்றும், அதில் போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என்னுடன் இருந்த கிரன்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், இது சம்மந்தமாக போலிசார் 03.03.2024ம் என்னை விசாரணை செய்தார் என்றும், போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.